**சுற்றறிக்கை**

வேலூர் மாவட்டம், பள்ளிக்கல்வித்துறை – 14.01.2024 அன்று "புகையில்லா போகி" கொண்டாடுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வேலூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டுத்துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைமாற்றத்துறை, பள்ளிக்கல்வித்துறை ஆகிய துறைகளின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டத்தின் காற்றுமாசுபாட்டினை குறைக்கும் தொடர் நடவடிக்கையாக இவ்வாண்டு பொங்கல் (தமிழர்) திருநாளுக்கு முந்தைய நாளான போகிப்பண்டிகையை "புகையில்லா போகி" என கொண்டாட அறிவுறுத்தும் வகையில் வேலூர் மாவட்ட அனைத்து வகைப் பள்ளிகளிலும் "புகையில்லா போகி" கொண்டாடும் நோக்கமாக இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளை எடுக்கவும், மேலும் குப்பைகளை எரிப்பதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்து பள்ளியில் தேசிய பசுமைப்படை / சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதனை மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்க / தனியார் பள்ளி) உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.